## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.125/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணய்யன் | மதம் | : இந்து |
| த/பெ | : முனிரத்தினம் | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : சின்னகடம்பூர் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**15.04.2025**

<u>வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 பட்டாவிற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் எனது பட்டா நிலத்திற்கு அருகில்தான் வழக்கு சொத்து உள்ளது. பட்டா நிலத்துடன் கலந்துதான் வழக்கு சொத்து வருகிறது. வழக்கு சொத்தான 188/5, 188/6 ஆகியவை பட்டா நிலம் இல்லை என்றாலும் அது அரசாங்க சொத்து என்றாலும் இல்லை. 1994 ல் எங்களுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள். அது எங்கள் இடம்தான். 1994 ல் யார் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சுப்பிரமணிய மந்தடி, துரைசாமி மந்தடியாகும். வழக்கு சொத்தான 188/5, 188/6 ஆகியவற்றிற்கு என் பெயரிலோ, என் அப்பா பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் சிமெண்ட் கூரை இருப்பதாக என் அப்பா தாக்கல் செய்த பிராதில் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. புல எண்.188/3 க்கு கிழக்கே உள்ள தாவா சொத்தான புல எண்.188/4 ன் கிழக்கு மற்றும் தெற்கு பக்கம் என் நிலம் உள்ளது என்பதை காட்ட புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு சொத்திற்கான புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தான புல எண்.188/4 என் அனுபவத்தில் இருப்பதாக கூறியுள்ளதை நிரூபணம் செய்ய என் பெயரிலோ, என் அப்பா பெயரிலோ உள்ள அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

3. நான் யார் பெயரில் எந்த பசலிக்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1994 ல் என் தம்பி பெயரில் பெறப்பட்ட SLR ஐ தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)